**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2026–ம் ஆண்டு ஜீலை திங்கள் 30– ஆம் நாள், வியாழக்கிழமை**

**சுருக்கு முறை வழக்கு எண். 389/2020**

**CNR.NO.TNTP190008622020**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம், உதவி ஆய்வாளர் அவர்கள், குற்ற எண்.61/2020 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரி :<br>1. திரு. ரஞ்சித்குமார் (வயது 21)<br>த/பெ. பாண்டுரங்கன் |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவு 294(b), 352, 506(1) of IPC |
| வனையப்பட்டது | இ.த.ச. பிரிவு 294(b), 352, 506(1) of IPC |
| தண்டிக்கப்பட்டது | **எதிரிகள் ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 352, 506(1) of IPC –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1. ரஞ்சித்குமார் | திரு. பாண்டுரங்கன் | இந்து | கூலி | நெ.6/28, முதல் தெரு, ராகவேந்திரபுரம், ஸ்ரீரங்கம், திருச்சி | 21 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 06.02.2020 |
| புகார் | : | 06.02.2020 |
| கைது தேதி | : | 06.02.2020 |
| பிணை விடுவிப்பு | : | 10.02.2020 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 05.01.2021 |
| விசாரணை முடிவு | : | 30.07.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 20.10.2020 |
| Date of Questioning | : | 04.03.2020 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | N.A |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief — Cross<br>(1) 20.03.2025 — 20.03.2025<br>(2) 20.03.2025 — 20.03.2025<br>(3) 20.03.2025 — 20.03.2025<br>(4) 20.03.2025 — 20.03.2025<br>(5) 22.01.2026 — 22.01.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 19.02.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை | : | Nil |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | | |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 21.10.2020 ம் தேதியன்று STC. No.389/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 30.07.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. வசந்தன் அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

கடந்த 06.02.2020 ம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு திருச்சி மாநகரம், ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரக எல்லைக்குட்ப்பட்ட சம்பவ இடமான ஸ்ரீரங்கம், ராகவேந்திரபுரம், விக்னேஷ் மந்திராலயா அருகே இருந்த, எதிரி இந்த தெருவுல எவண்டா ஆளுபுண்ட, என்னைய கேட்காம எவனும் இங்க தூங்கக்கூடாது என்று சத்தம் போட்டதை, வாதி அறிவழகன் கேட்டபோது, எதிரி ரஞ்சித்குமார், வாதி அறிவழகனை பார்த்து, நீ என்னடா இங்க நாட்டாம புண்ட பண்ண பாக்குறியா என்று அசிங்கமாக திட்டி, வாதி அறிவழகனின் இடது கன்னத்தில், கையால் தாக்கியும், எவனாவது என்னைய பத்தி போலீஸ்ல கம்ளைன்ட்

கொடுத்திங்கன்னா வெட்டி கொன்று புடுவேன்னு, கொலை மிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 352, 506(1) of IPC ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரி முன்னிலையான உடன் அவருக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பு கேட்கப்பட்டும் எதிரிக்கு எதிராக கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் படி எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 352, 506(1) of IPC கீழ் அவரிடம் விளக்கி வினவியபோது எதிரி பொய்வழக்கு குற்றவாளி இல்லை என கூறியதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) அ.சா.1 **திரு. அறிவழகன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வருவதாகவும், எதிரி ரஞ்சித்குமாரை தனக்கு தெரியும் என்றும், கடந்த 06.02.2020ம் தேதி விடியற்காலை 05.00 மணியளவில் தாங்கள் வீட்டில் இருந்தபோது எதிரி ரஞ்சித்குமார் ஏரியாவில் யாரையும் தூங்கவிடாமல்

எல்லோரையும் தேவடியா என அசிங்கமாக பேசி கொண்டு இருந்தார் என்றும், அதை தான் கேட்டதற்கு தனது வலது கண்ணத்தில் அறைத்துவிட்டதாகவும், பின்னர் தன்னை பார்த்து காவல் நிலையத்தில் புகார் அளித்தால் கொன்றுவிடுவேன் என்றும், எதிரி ரஞ்சித்குமார் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்னர் தான் வழக்கு சம்பந்தமாக தான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், தான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டதாகவும், பின்னர் தான் அதை படித்து பார்த்து கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், அந்த புகார் ஆவணம் அ.சா.ஆ.1 என்றும், தற்போது கூட எதிரி தங்கள் ஏரியாவில் பிரச்சனை செய்து கொண்டு வருவதாகவும், வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் ,அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 **திரு. கண்ணப்பன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வருவதாகவும், எதிரி ரஞ்சித்குமாரை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனக்கு தெரியும் என்றும், கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி ஞாபகம் இல்லை என்றும், தனது மனைவி விடியற்காலை 04.00 மணியளவில் கோலம் போட்டுக்கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரி கரைசல் செய்துக்கொண்டு இருந்ததாகவும், கையில் இருந்த ஆயுத்தை தூக்கி எறிந்ததில் தனது மனைவிக்கு காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1 யிடமும் பிரச்சினை செய்து அ.சா.1 யை கண்ணத்தில் எதிரி ரஞ்சித்குமார் அறைந்ததாகவும், அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 **திரு. முத்துசாமி** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 06.02.2020ம் தேதி காலை 05.30 மணி இருக்கும் என்றும், அப்போது எதிரி ரஞ்சித் பிரச்சனை செய்து கொண்டு இருந்ததாகவும், அது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தததாகவும், அப்போது அந்த ஆவணத்தில் தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், மேற்படி ஆவணத்தில் தன்னுடன் செல்வராஜ் என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், அந்த பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.2 என்றும், அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4 **திரு. செல்வராஜ்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 5 வருடத்திற்கு முன்பு ஒருநாள் காலை பிரச்சினை நடந்து கொண்டது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தபோது எதிரி ரஞ்சித் பிரச்சனை செய்து கொண்டு இருந்ததாகவும், அது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்ததாகவும், அப்போது அந்த ஆவணத்தில் தன்னுடன் முத்துசாமி என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார்.

(5) அ.சா.5 **திரு. கோபிநாத்** தனது சாட்சியத்தில் தான் தற்போது திருச்சி மாவட்டம் நவல்பட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு கடந்த 06.02.2020 அன்று காலை 10.15 மணியளவில் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய

பொறுப்பில் இருந்தபோது ஸ்ரீரங்கம் ராகவேந்திரா புரம் முதல் தெருவை சேர்ந்த நாராயணன் மகன் அறிவழகன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 61/2020 ச/பி 294(பி), 352, 506(1) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துசாமி, செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தததாகவும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 என்றும், பின்னர் சாட்சி அறிவழகன், கண்ணப்பன், ராஜேஸ்வரி, முத்துசாமி, செல்வராஜ் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்தேன் என்றும், தனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் 06.02.2020 அன்று 14.00 மணிக்கு வழக்கின் எதிரியை ஸ்ரீரங்கம் அம்மாமண்டபம் பேருந்து நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்ததாகவும், தனது விசாரணையை முடித்து 21.02.2020 அன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(1) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தததாகவும், அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரி அதை மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும்

முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 352, 506(1) of IPC அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) கடந்த 06.02.2020ம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு திருச்சி மாநகரம், ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரக எல்லைக்குட்ப்பட்ட சம்பவ இடமான ஸ்ரீரங்கம், ராகவேந்திரபுரம், விக்னேஷ் மந்திராலயா அருகே இருந்த, எதிரி இந்த தெருவுல எவண்டா ஆளுபுண்ட, என்னைய கேட்காம எவனும் இங்க தூங்கக்கூடாது என்று சத்தம் போட்டதை, வாதி அறிவழகன் கேட்டபோது, எதிரி ரஞ்சித்குமார், வாதி அறிவழகனை பார்த்து, நீ என்னடா இங்க நாட்டாம புண்ட பண்ண பாக்குறியா என்று அசிங்கமாக திட்டி, வாதி அறிவழகனின் இடது கன்னத்தில், கையால் தாக்கியும், எவனாவது என்னைய பத்தி போலீஸ்ல கம்ளைன்ட் கொடுத்திங்கன்னா வெட்டி கொன்று புடுவேன்னு, கொலை மிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 352, 506(1) of IPC ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.1 புகார்தாரர் சாட்சி தனது முதல் விசாரணையில் " **கடந்த 06.02.2020ம் தேதி விடியற்காலை 05.00 மணியளவில் நாங்கள் வீட்டில் இருந்தபோது எதிரி ரஞ்சித்குமார் ஏரியாவில் யாரையும் தூங்கவிடாமல் எல்லோரையும் தேவடியா என அசிங்கமாக பேசி கொண்டு இருந்தார் அதை நான்**

**கேட்டதற்கு எனது வலது கண்ணத்தில் அறைந்துவிட்டார். பிறகு என்னை பா்ர்்துது காவல் நிலையத்தில் புகார் அளித்தால் கொன்றுவிடுவேன் என்று எதிரி ரஞ்சித்குமார் கொலை மிரட்டல் விடுத்தார். பின்னா நான் வழக்கு சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டனர். பின்னர் நான் அதை படித்து பார்த்து கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த புகார் ஆவணம் அ.சா.ஆ.1 என்றும்."...**

அ.சா.1 புகார்தாரர் சாட்சி தனது குறுக்கு விசாரணையில் " **நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தார்கள். அந்த புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். "** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புகார்தாரரின் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்த்ததில் புகார்தாரர் அவரது முதல் விசாரணையில் " **நான் வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டனர். பின்னர் நான் அதை படித்து பார்த்து கையொப்பம் செய்து கொடுத்தேன். என்றும், அவரது குறுக்கு விசாரணையில் அந்த புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் "** என்று சாட்சியம் அளித்திருப்பது இவ்வழக்கை பாதிப்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் அ.சா1 புகார்தாரரின் சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சிக்கு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 கண்ணப்பன் தனது சாட்சியத்தில் " **வழக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் தெரிந்ததை கூறினேன்.** " என்று சாட்சியம் அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அ.சா.3 மற்றும் அ.சா.4 தனது சாட்சியத்தில் " **நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் பிரச்சனை சம்பந்தமாக எழுதியிருந்தனர். பிரச்சனை அனைவரும் சேர்ந்து புகார் கொடுக்க வேண்டும் என்று கையொப்பம் கேட்டனர் நான் போட்டேன்."** என்று சாட்சியம் அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் அ.சா.5 உதவி ஆய்வாளர் சாட்சியத்தை உறுதியூட்டு விதமாக தனிநபர் எவரும் இல்லாததால் தனிநபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மேலும் அ.சா.5 உதவி ஆய்வாளர் அவர்களை சாட்சியத்தை மட்டுமே எதிரி தான் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 294(b), 352, 506(1) of IPC – ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு

செய்தும், கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லை என்பதால் வழக்கு சொத்தை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 30 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAIRAJESH K

Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.07.30 21:09:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திரு. அறிவழகன்
அ.சா 2 : திரு. கண்ணப்பன்
அ.சா 3 : திரு. முத்துசாமி
அ.சா 4 : திரு.செல்வராஜ்
அ.சா 5 : திரு. கோபிநாத் (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 20.03.2025 புகார் ஆவணம்
அ.சா.ஆ. 2 : 20.03.2025 பார்வை மகஜர் ஆவணம்
அ.சா.ஆ. 3 : 22.01.2026 அச்சு முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ. 4 : 22.01.2026 மாதிரி வரைபடம்

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:–**இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் :–** இல்லை

**எதிரி தரப்பில் சான்றாவணம் :–** இல்லை

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.07.30 21:10:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்
3. காவல் ஆய்வாளர், ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம்.